முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 177/2015

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ம் நாள் இன்று இந்த வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராணி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | கிராமம் | : இடுவம்பாளையம் |
| வயது | : 57 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 31-01-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவாச் சொத்து என் கணவருக்கு, என் மாமனார் எழுதி வைத்த வகையில் பாத்தியப்பட்டதாகும். மொத்தம் 3.75 ஏக்கர் இருக்கிறது. 3.75 ஏக்கர் முழுவதும் மனையிடங்களாக பிரிக்கப்பட்டு, விற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி 34 வருடங்களாகிறது. என் திருமணத்திற்கு பின்பு தான் மனையிடங்களாக பிரிக்கப்பட்டது. பூமிக்கு வடபுறத்தில் ரோட்டை ஒட்டி சுமார் 1.5 ஏக்கர் அளவில் பாறை குழி இருக்கிறது என்றால் சரிதான்.

2) ராஜுக்கு பாத்தியப்பட்ட 0.68 ஏக்கர் பாறை குழியில் தான் இருக்கிறது. பாறை குழியின் ஆழம் சுமார் 50 அடி இருக்கும். பாறை குழிக்கு சென்று கல் எடுப்பதற்காக லாரிகள் செல்ல இறக்கமாக ரோடு இருந்தது. அதை பிரதிவாதி வாங்கி விட்டார். பிரதிவாதி கிரயம் வாங்கி பாறை குழிக்கு மண் கொட்டி இருக்கிறார். தாவாச் சொத்துக்கு மேல்புறத்தில் குழி இருக்கிறது. அந்த குழியையும் விற்று விட்டோம். அந்த குழிக்கு கிழபுறத்தில் முள்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.

3) பிரதிவாதி கேட்டும் (Gate) அமைத்திருக்கிறார். தடமாகத் தான் விற்றிருக்கிறோம் என்றால் இல்லை. தாவாச் சொத்து தடம் என்று எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். தடத்தை பஞ்சாயத்திற்கு எழுதிக்

கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். தடமாக காட்டி விற்று விட்டு, தற்போது பொய்யான விவரங்களுடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.31 17:06:07 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.